**08.08.2016**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 'யானைகள் காப்போம்'

சுற்றுச்சூழல் சமன்பாட்டின் பாதுகாவலனாக யானைகள் இருப்பதால், அவற்றின் பாதுகாப்பு பல்லுயிரிகளின் பாதுகாப்புக்கு முக்கியமானதாக உள்ளது. ஆகவே, நாம் யானைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். 19-ஆம் நூற்றாண்டில் 50 சதவீதமாக இருந்த வனங்களின் பரப்பளவைத் தற்போது 21 சதவீதமாக நாம் குறைத்துவிட்டோம். நகரமயமாதல், தொழில் வளர்ச்சி, மக்கள்தொகைப் பெருக்கம் என பல்வேறு காரணிகள் வனப்பகுதி குறைய காரணமாக இருந்துள்ளன.

வனப் பகுதியின் பரப்பு குறைந்துவிட்டதால் உணவுப் பற்றாக்குறை, இடம் பெயர போதிய இடம் இல்லாதது, வழித்தட ஆக்கிரமிப்பு, வழித்தடம் துண்டுபடுதல் போன்ற பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்ட யானைகளின் எண்ணிக்கையும் தற்போது குறைந்துவிட்டது.

யானைகள் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினம். அவை காட்டில் பல்வேறு உயிரினங்கள் வாழ காரணமாகின்றன.

யானைகள் தொலைதூரம் நடப்பவை. நாளொன்றுக்கு சராசரியாக 25 சதுர கி.மீ. தூரம் பரப்புடைய வனத்தை நடந்து கடப்பவை. யானைகள் நடக்கும் இடமெல்லாம் வனத்தில் ஒரு பாதை உருவாகிறது. இன்று நாம் வனப் பகுதியில் பயன்படுத்தும் பாதைகள் முன்பு யானைகள் ஏற்படுத்திய பாதைகள்தாம். காட்டில் யானைகள் நடப்பதால் உருவாகும் எல்லா வழித்தடங்களும் ஏதாவதொரு நீர்நிலையை நோக்கியே செல்லும். கோடைக்காலத்தில் நீரின்றித் தவிக்கும் மற்ற வன விலங்குகள் யானைப் பாதை வழியே சென்று நீர் இருக்கும் இடத்தைதைக்

கண்டறிகின்றன.

இந்தியாவில் பெரும்பாலான காடுகள் இலையுதிர் காடுகளாகவும், முள்புதர் காடுகளாகவும் உள்ளன. இவற்றில்தான் அரியவகை உயிரினங்கள் காணப்படுகின்றன.

ஒரு முள்புதர்க் காட்டில் புலி போன்ற உயிரினங்கள் வாழ வேண்டுமானால், அக்காட்டில் யானைகள் இருக்க வேண்டும். புலி போன்ற ஊன் உண்ணிகளுக்கு உணவாகும் மான் போன்ற தாவர உண்ணிகள் முள்புதர்க் காட்டில் வாழ வேண்டுமானால், அவை தடையின்றி நடமாட பாதைகள் வேண்டும். யானைகள் நடமாடினால் மட்டுமே காட்டில் பாதைகள் உருவாகும். நன்கு வளர்ந்த யானைகள் 3,500 கிலோ முதல் 4,500 கிலோ வரை எடையுள்ளவை. யானைகளுக்கு அதிக உணவும், தண்ணீரும் தேவைப்படுகின்றன. உணவுக்காக யானைகள் மரக்கின் கிளைகளை உடைக்துப் பயன்படுக்துகின்றன. கோடைக் காலங்களில் உணவு கிடைக்காமல் கிரியும் மான் உள்ளிட்ட காவர உண்ணிகள் யானைகள் உடைத்துப்போட்ட மரக் கிளைகளை உண்டுவாழ்கின்றன.

யானைகள் நாளொன்றுக்கு சராசரியாக பகினைந்து முறை சாணமிடுகின்றன. இந்தச் சாணம் பல்வேறு வகைகளில் பிற உயிரினங்களுக்குப் பயன்படுகிறது. யானை சாணத்தில் உள்ள தாது உப்புகள் வண்ணத்துப்பூச்சிகளின் இனப் பெருக்கத்துக்குப் பயன்படுகின்றன.

யானைகள் சாப்பிட்ட உணவு செரிக்து சாணமாக வெளியேற 46 முதல் 72 மணிநேரம் ஆகிறது. ஓரிடத்தில் சாப்பிட்ட உணவு சாணமாக வெளியேறுவதற்குள் அங்கிருந்து 50 கி.மீ. தூரம் யானைகள் நடந்துவிடுகின்றன. அவை சாப்பிட்ட உணவு 40 சதவீதம் மட்டுமே செரிமானமாகிறது. மீதமுள்ள உணவில் தாவரத்தின் பல்வேறு விதைகள் வெளியேறுகின்றன.

ஓரிடத்தில் யானைகள் உணவாக உட்கொண்ட தாவரத்தின் விதைகள் வேறிடக்கில் முளைக்கு மாறுபட்ட மரபியல் தன்மையை உருவாக்குகின்றன. சிதைந்த சாணம் கரையான்களுக்கு உணவாகிறது. இறுதியாக சாணம் உரமாகி வனத்தை வளப்படுத்துகிறது.

தாவர உண்ணிகளுக்கு சில பருவ காலங்களில் காது உப்பு குறைந்து காணப்படும். யானைகள் இயற்கை உப்பு மண்ணைக் கண்டறிந்து பயன்படுத்தும்

தன்மையுடைவை. அவை பயன்படுத்திய உப்பு மண்ணை பிற தாவர உண்ணிகளும் பயன்படுத்துகின்றன.

ஆகவே, வனப் பகுதி வளமாக இருக்க வனப் பகுதியில் யானை வாழவேண்டும். இதனைப் புரிந்துகொண்டு யானைகளை வனப் பகுதியில் வாழ தொந்தரவு செய்யாமலும், அவற்றின் வாழிடத்தை ஆக்கிரமிப்பு செய்யாமலும் நாம் இருக்க வேண்டும்.

யானைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற முயற்சியை செய்யவேண்டும். யானைப் பாதுகாப்பு என்பது ஓர் உயிரினம் சார்ந்தது மட்டுமல்ல. ஒட்டுமொத்த சூழலியல் சமன்பாட்டை சார்ந்தது. யானைகள் அழிந்தால் வனப் பகுதி அழியும். வனப் பகுதி அழிந்தால் பிற வன உயிரினங்களும் அழிந்துபோகும். எனவே, சுற்றுச்சூழல் சமன்பாட்டைப் பாதுகாக்கும் யானைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

## விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு

திருவள்ளூரை அடுத்த திரூரில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாமும், விவசாயக் கண்காட்சியும் சனிக்கிழமை நடைபெற்றன.

திருவள்ளூர் எம்.பி. பி.வேணுகோபால், மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி ஆகியோர் தலைமை வகித்தனர்.

திரூர் நெல் ஆராய்ச்சி, அறிவியல் நிலைய தலைவர் அகிலா, திட்ட ஒருங்கிணைப்பாளர் எ.சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், வேணுகோபால் பேசியதாவது:

இயற்கை பேரிடர்களால் ஏற்படும் பயிர்சேதங்களை சரி செய்ய பயிர்காப்பீட்டுத் திட்டம் பெரும் உதவியாக இருக்கும்.

சென்ற வருடம், திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 33,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட பயிர்கள் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெய்த கன மழையால் நீரில் முழ்கி சேதமடைந்தன.

இதனால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளானர்கள். இதை சரி செய்ய ரூ..44 ஆயிரம் கோடி நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

பூச்சிகளின் தாக்குதல், மழை வெள்ளம், சுழல்காற்று ஆகியவற்றால், பயிர்கள் பாதிப்படையும்போது விவசாயிகள் செலுத்திய காப்பீட்டுத் தொகை மூலம் தங்கள் இழப்பீடுகளை சரி செய்து கொள்ளலாம்.

மேலும், 212 விவசாய மையங்கள் அமைத்து பாசன வசதிக்காக ரூ.20.9 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இது 324 மையங்களாக விரிவாக்கப்பட்டு ரூ.35.4 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு உயர்த்தப்படும். களை எடுக்கும் இயந்திரம், நெல் நடவு செய்யும் இயந்திரம் போன்றவற்றை விவசாயிகள் வாங்குவதற்கு 40 சதவீதம் வரை அரசு மானியம் வழங்கி வருகிறது. இதனால், 147 லட்சம் டன்கள் வரை நெல் உற்பத்தி உயரும். எனவே, விவசாயிகள் இத்திட்டங்களில் சேர்ந்து பயனடைய வேண்டும் என்றார்.

முன்னதாக, விவசாயிகளுக்கு வேளாண் துறை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்ததை வேணுகோபாலும், ஆட்சியர் சுந்தரவல்லியும் பார்வையிட்டனர்.

வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு மண்வள அட்டை, அம்மா நெல் விதைகள், தென்னங்கன்றுகள், தாவர விதைகள் உள்ளிட்டவற்றை வேணுகோபால் வழங்கினார்.

பூந்தமல்லி எம்எல்ஏ டி.ஏ.ஏழுமலை, திருவள்ளூர் ஒன்றியக் குழுத் தலைவர் புட்லூர் ஆர்.சந்திரசேகர், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சி.முத்துதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## முருங்கைக்காய் விலை வீழ்ச்சி

வெள்ளக்கோவில் வாரச் சந்தையில் முருங்கைக்காய் விலை ஞாயிற்றுக்கிழமை குறைந்தது.

கடந்த வாரத்தை விட ரூ.5 குறைந்து கிலோ ரூ.15-க்கு முருங்கைக்காய் விற்பனையானது. சராசரியாக 10 டன் அளவுக்கு வாரந்தோறும் வரத்து இருக்கும். ஆனால், தற்போது விளைச்சல் இல்லாததால் வரத்து பாதியாகக் குறைந்துள்ளது.

மர முருங்கைகாயைக் காட்டிலும் செடி முருங்கைக்காய் சற்றுக் கூடுதல் விலைக்கு விற்பனையானது. முருங்கைக்காயை வாங்க வியாபாரிகள் வராததால் அதன் விலை குறைந்து விட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். வரும் வாரங்களில் விலை கூட வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

## தோட்டக்கலைத் துறை திட்ட விண்ணப்ப மேளா

அவிநாசி தோட்டக்கலைத் துறையின் திட்டங்கள் விவசாயிகள் பெற்று பயனடைவதற்கான விண்ணப்ப மேளா புதுப்பாளையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இம்முகாமிற்கு, அவிநாசி தோட்டக்கலை உதவி இயக்குநர்(பொ) மு.ஜெரினா பேகம் தலைமை வகித்தார். இதில் தோட்டக்கலைத் துறை சார்பில் 2016-17 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும் இதில், 50-க்கும் மேற்பட்ட விவசாயிகளிடம் இருந்து தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டங்களில் பல்வேறு பிரிவுகளில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

## ரூ.79 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 79 லட்சத்து 49 ஆயிரத்துக்கு கொப்பரை மற்றும் தேங்காய் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 3 ஆயிரத்து 39 மூட்டைகளில் 1 லட்சத்து 52 ஆயிரத்து 308 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 55.40-க்கும், குறைந்தபட்சமாக கிலோ ரூ. 52.85-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 52.25-க்கும் குறைந்தபட்சமாக கிலோ ரூ. 42.25-க்கும் என ரூ. 77 லட்சத்து 66 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

இதேபோல, 13 ஆயிரத்து 17 கிலோ எடையுள்ள 31 ஆயிரத்து 423 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 14 ஆயிரத்து 640-க்கும் குறைந்தபட்சமாக டன் ரூ. 11 ஆயிரத்து 666-க்கும் என ரூ. 1 லட்சத்து 83 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது. மொத்தம் ரூ. 79 லட்சத்து 49 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**அரசு பழப் பண்ணையில் பெர்ஸிமன் பழ சீசன் துவக்கம்**

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் உள்ள அரசு பழப் பண்ணையில் ஜப்பான் நாட்டின் தேசியப் பழமான பெர்ஸிமன் பழ சீசன் துவங்கியுள்ளது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் பேரி, ஆரஞ்சு, பீச், பிளம்ஸ், எலுமிச்சை, லிச்சி உள்ளிட்ட ஏராளமான பழ மரங்கள் உள்ளன. இதில், அரிய வகை பெர்சிஸன் பழ மரங்களும் 109 உள்ளன.

பொதுவாக, ஆகஸ்ட், செப்டம்பர் வரை பெர்ஸிமன் சீசன் துவங்கும். இந்த ஆண்டு முன்கூட்டியே சீசன் களைகட்டத் துவங்கியுள்ளது. ஆஸ்திரேலியாவை தாயகமாகக் கொண்ட இப்பழம், ஜப்பான் நாட்டின் தேசியப் பழமாகவும் உள்ளது.

தக்காளி போன்ற தோற்றத்தைக் கொண்ட இந்தப் பழத்தில் வைட்டமின் ஏ, பி சத்துகள் நிறைந்துள்ளன.

மற்ற பழங்களைப் போன்று இப்பழங்கள் மரத்திலேயே பழுப்பதில்லை. மாறாக, காய் வடிவில் பறிக்கப்படும் பழத்தை எத்தனால் என்ற திரவத்தில் ஊறவைத்தால் இரண்டு நாள் கழித்துதான் பழுக்கும்.

தென்மாநில அளவில் குன்னூர் சிம்ஸ் பூங்கா தோட்டக்கலைப் பண்ணையில் மட்டுமே இப்பழ மரங்கள் உள்ளன. இவை கிலோ ரூ. 50-க்கு விற்கப்படுகின்றன. பழ மர நாத்துகளும் தோட்டக்கலைப் பண்ணையில் விற்கப்படுகின்றன.

மருத்துவ குணமிக்க இந்தப் பழத்தைச் சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## பயிர்க் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வுக் கையேடு வழங்கல்

புதிய பயிர்க் காப்பீட்டுக் கிட்ட விவரங்கள் அடங்கிய விழிப்புணர்வுக் கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தில் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் தொ.மு.நாகராசன் தலைமை வகித்து, புதிய பயிர்க் காப்பீட்டுத் கிட்டம் குறித்த தகவல்கள் அடங்கிய விமிப்புணர்வுக் கையேட்டினை வெளியிட்டார். வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா.ச.சண்முகம் வரவேற்றுப் பேசினார் முகாமில், முன்னோடி வங்கி மேலாளர் முத்தரசு, நபார்டு வங்கி மாவட்ட முன்னேற்ற மேலாளர் டி.கே.பார்த்தசாரதி, வேளாண் இணை இயக்குநர் ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சுசிலா ஆகியோர் திட்டத்தின் பயன்கள் குறித்து பேசினர்.

மேலும், விழாவில் சிறுதானிய மதிப்புக் கூட்டுதல் புத்தகத்தை வேளாண்மை இணை இயக்குநர் ராஜேந்திரன் வெளியிட, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் தொ.மு.நாகராசன் பெற்றுக்கொண்டார்.

முகாமில், மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.1,000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு: அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி

தமிழக அரசுகால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.1,000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து, திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்று, பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி பேசினார்.

அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சி காளியம்மன் நகரில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர்

வா.சம்பத் தலைமையில் நடைபெற்றது. முகாமை தொடக்கிவைத்து பரிசுகளை வழங்கி பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமிபேசியது:

சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 2016-17- ஆம் ஆண்டில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் 20 ஊராட்சி ஒன்றியங்களில் மாதம் ஒரு தொலைதூரக் கிராமத்தைத் தேர்ந்தெடுத்து நடத்தப்படுகிறது.

இம்முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல் , சினைப் பரிசோதனை, சினைப் பிடிக்காத மாடுகளுக்கு சிகிச்சை, ஆடு, கன்றுகளுக்கு குடல்புழு நீக்க சிகிச்சை, ஆண்மை நீக்கம் செய்தல், கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசி போடுதல் ஆகிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் 30 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டலுக்கு ரூ.300, சிறந்த கன்றுகளுக்கு பரிசு வழங்க ரூ.400, கால்நடைகளுக்கு மருந்து செலவினம் ரூ.3,800, விளம்பரச் செலவு ரூ.500-ம் அரசு வழங்கி வருகிறது. ஒவ்வொரு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமிலும், ரூ.5,000 வரை செலவிடவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. சேலம் மாவட்டத்தில் 289 கால்நடை மருத்துவ முகாம்கள், ரூ.14.45 லட்சம் செலவில் நடத்திட திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழக அரசு கால்நடை துறைக்கு ரூ.1,000 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து, திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்றார். இதில் மக்களவை உறுப்பினர் கே.காமராஜ், சட்டப்பேரவை உறுப்பினர் கு.சித்ரா, மாநில தலைமைக் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆர்.இளங்கோவன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எஸ்.சதீஷ்குமார், கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குநர் செங்கோட்டையன், உதவி இயக்குநர் ஆர்.பழனியப்பன், உதவி மருத்துவர்கள் முத்துக்குமார், ரகுபதி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆட்டு சீஸ் மாதம்

சீஸ் என்னும் பாலாடைக்கட்டியின் உபயோகம் ஐரோப்பிய நாடுகளில் அதிகம். இந்தியாவில் குறைவு. தென்னிந்தியாவை விட வடமாநிலங்கள், வடகிழக்கு மாநிலங்களில் தான் சீஸ் உபயோகம் அதிகம். பிரான்சில் 400 வகையான சீஸ்கள் கிடைக்கின்றன. ஐரோப்பாவில் ஆட்டின் பாலில் இருந்தும்சீஸ் தயாரிப்பர். அமெரிக்காவில் ஆகஸ்ட் மாதத்தை ஆட்டு சீஸ் மாதமாக கொண்டாடுகின்றனர். ஆட்டுசீஸ் பயன்பாடு அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இதிலிருந்து தயாரிக்கப் படும் உணவுப் பொருட்களை மையமாக வைத்து போட்டிகள் நடத்தப்படுகின்றன. பசும்பாலின் கொழுப்பின் அளவும் ஆட்டுப்பால் கொழுப்பின் அளவும் சமம். பசும்பாலை விட, ஆட்டுப்பாலில் சீஸ் தயாரிப்பது எளிது.

### தேயிலை ஏலத்தில் 93 சதவீதம் விற்பனை

குன்னூர் :குன்னூர் நடந்த தேயிலை ஏலத் தில், 93 சதவீதம் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 31க்கான ஏலம் நடந்தது. இதில், 16 லட்சத்து, 72 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இடம் பெற்றது. இதில், இலை ரகம்,11 லட்சத்து, 31 ஆயிரம் கிலோ; டஸ்ட் ரகம், 5 லட்சத்து, 41 ஆயிரம் கிலோவும் இருந்தது. 93 சதவீதம் தேயிலை தூள் விற்பனையானது. ஒரு ரூபாய் கூடுதலாக விலை கிடைத்தது.

இந்த ஏலத்தில், சி.டி.சி., ரகத்தில், உயர்ந்தபட்ச விலையாக, தேயிலை தூள் கிலோ,196 ரூபாய்; ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு, 231 ரூபாயும் கிடைத்தது.சராசரி விலையாக, சாதாரண வகை இலை ரகத்துக்கு, 78 ரூபாய் முதல், 81 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை தூள், 100 ரூபாயில் இருந்து, 130 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை, 80 ரூபாயில் இருந்து, 83 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை துாள், 110 லிருந்து, 145 வரையிலும் ஏலம் விடப்பட்டது. மொத்தம் 15.39 லட்சம் விற் பனையானது. இதன் மதிப்பு,13 கோடியே 59 லட்சம் ரூபாய் ஆகும்.

## தாண்டிக்குடி மலைப்பகுதியில் பலா சீசன் துவக்கம்

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் சுவை மிகுந்த பலா சீசன் துவங்கியுள்ளது.

தாண்டிக்குடி மலைப்பகுதியில் ஆடலுார், பன்றிமலை, மஞ்சள்பரப்பு, தடியன்குடிசை, கும்பறையூர், பூலத்துார், மூலையாறு பகுதியில் பலா மரங்கள் உள்ளன. வழக்கமாக ஜூலையில் துவங்கும் சீசன் அக்டோபர் வரை நீடிக்கும். கடந்தாண்டு போதிய மழையில்லாததால் குறைந்தளவே காய்கள் வரத்துள்ளது. தற்போது பறிக்கப்படும் காய்கள் உள்ளூர் மார்க்கெட், திண்டுக்கல், சித்தரேவு, ஊத்து, மச்சூர் பகுதியில் விற்பனைக்கு அனுப்படுகிறது. காய்களின் தரத்திற்கு ஏற்ப ரூ.100 முதல் 200 வரை விலை போகிறது. சுவை மிகுந்த பலா பழங்களை கொடைக்கானல், தடியன்குடிசை வரும் சுற்றுலா பயணிகள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

## திண்டுக்கல்லில் வாடாமல்லி கிலோ ரூ.10க்கு விற்பனை

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் வரத்து அதிகரிப்பால் வாடாமல்லி விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

திண்டுக்கல், சாணார்பட்டி, வெள்ளோடு, புகையிலைப்பட்டி பகுதியில் வாடாமல்லி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

ஆடி மாதத்தில் சுப நிகழ்ச்சிகள் ஏதுவும் இல்லாததால் பூக்களின் விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. இதில் வாடாமல்லி மாலைகள் தயாரிக்க மட்டுமே பயன்படுவதாலும், 'பூ'வின் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்த வண்ணம் உள்ளது.

வாடாமல்லி சாகுபடி செய்த விவசாயிகள் வாடியுள்ளனர். ஆடிப்பெருக்கின் போது கிலோ ரூ.60 க்கு விற்றது. நேற்று கிலோ ரூ.10 க்கு விற்பனையானது.

பூ வியாபாரி ஒருவர் கூறுகையில்,'வாடாமல்லிக்கு உள்ளூரில் மவுசு இல்லை. அதனால் பெங்களூரு, ஆந்திராவுக்கு விற்பனைக்கு அனுப்புகிறோம். அங்கு ஓரளவுக்கு போதுமான விலை கிடைக்கிறது. தினமும் 500 கிலோ வரை விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஆடி மாதம் விசேஷ நிகழ்ச்சிகள் இல்லாததால் விலை சரிவடைந்துள்ளது ',என்றார்.

## தானிய வகைகள் குறித்து பாரம்பரிய உணவு விழா

கிருஷ்ணராயபுரம்: மாயனூர் சமுதாய கூடத்தில், பாரம்பரிய உணவு திருவிழா நடந்தது. கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த மாயனூர் பகுதியல் உள்ள சமுதாய கூடத்தில், பாரம்பரிய உணவு திருவிழா நடந்தது. யூனியன் சேர்மன் முத்துசாமி தலைமை வகித்தார். கிருஷ்ணராயபுரம் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் குறள்செல்வி, கம்பு, அரிசி, கேழ்வரகு, புட்டு கொள்ளுரசம், போன்றவற்றின் பாரம்பரிய குணங்கள் பற்றி எடுத்து கூறினார். இதில், குழந்தைகள் வளர்ச்சி அலுவலக இளநிலை உதவியாளர் மோகன், அங்கன்வாடி மைய பணியாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## கால்வாய் தூர்வாரும் பணி தீவிரம்

குளித்தலை: கூடலூர் பகுதியில், தூர்ந்து போன கண்ணாறுகளை தூர்வாரும் பணி தீவிரமாக நடக்கிறது. கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த கூடலூர், மேட்டுமருதூர் விவசாயிகள், பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு உட்பிரிவு செயற்பொறியாளரிடம், கட்டளை மேட்டுவாய்க்கால் செடிகொடிகளை அகற்ற கோரிக்கை வைத்தனர். அதையடுத்து, கூடலூர் பகுதியில் உள்ள பாசன கண்ணாறு மற்றும் மேட்டு மருதூர் மேலவயல் பாசன கண்ணாறு, மங்கம்மாள் சாலை வடிகால் கண்ணாறு, சுடுகாடு வடிகால் கண்ணாறு ஆகியவை பொக்லைன் இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி தீவிரமாக நடக்கிறது. இப்பணி முழுமையடையுமானால், கூடலூர் மற்றும் மேட்டுமருதூர் சுற்றுவட்டார பகுதிகளில், நீர்வரத்து காலங்களில் விவசாயம் செழிப்படையும் என்று, விவசாயிகள் தெரிவித்தனர்.

## மாயனூர் ஆற்றுப்படுகையில் மீன்கள் விற்பனை அமோகம்

கிருஷ்ணராயபுரம்: மாயனூர் காவிரி ஆற்றுப்படுகையில் பிடிக்கபடும் மீன்களை வாங்க, மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த மாயனூர் காவிரிப் படுகை அணையில், தற்போது மீன்கள் வரத்து அதிகமாக உள்ளதால், மீனவர்கள் மீன்களை பிடித்து அருகில் உள்ள வாய்க்கால் கரை ஓரத்தில் வைத்து விற்கின்றனர். கடந்த வாரம், காவிரியில், 5,000 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டதால், கதவணைக்கு அதிகளவு மீன்கள் வந்தன. இந்நிலையில், நேற்று விடுமுறை நாள் என்பதால், மீன்கள் வாங்க மக்கள் அதிகமாக வந்தனர். இங்கு விற்கப்படும் மீன்கள், உயிருடன் இருப்பதாலும், மீன்கள் சுவையாகவும் குறைந்த விலையில் கிடைப்பதாலும், மக்கள் ஆர்வமுடன் வாங்கிச்செல்கின்றனர்.

இதுகுறித்து, மீனவர் அருண் கூறியதாவது: வாய்க்கால் பகுதியில் ஓடும் தண்ணீரில் பிடிக்கப்படும் மீன்களை வைத்து உயிருடன் விற்கப்படுகிறது. தற்போது காவிரியில் குறைந்த தண்ணீர் வருவதால், மீன்கள் வரத்து சற்று குறைந்துள்ளது. கெண்டை மீன்கள், கிலோ, 50 முதல் 80 ரூபாய் வரையிலும், சிலேபி மீன்கள் கிலோ, 100 முதல், 120 ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது. மீன்களை வாங்க கரூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம், பஞ்சாபட்டி, புலியூர் ஆகிய இடங்களில் இருந்து மக்கள் வந்து, வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## இயந்திர நெல் நடவிற்கு மானியம் ....உயர்வு எக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வழங்க முடிவு

உத்தமபாளையம்: நடப்பாண்டில் இயந்திர நெல்நடவிற்கு வழங்கப்படும் மானியம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும், விவசாயிகள் இயந்திர நடவை பின்பற்றி கூடுதல் மகசூல் எடுக்க வேண்டும் என்றும் மாநில வேளாண் கூடுதல் இயக்குநர் சங்கரலிங்கம் கேட்டுக் கொண்டார்.

திருந்திய நெல் சாகுபடி முறையை முதலில் வலியுறுத்திய வேளாண் துறை தற்போது இயந்திர நடவு முறையை அமல்படுத்த வலியுறுத்தி வருகிறது. இயந்திர நடவு முறையில் அதிக மகசூல் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே தமிழக அரசு இயந்திர நடவிற்கு பின்னேற்பு மானியமாக எக்டருக்கு ரூ. 3 ஆயிரம் வழங்கி வந்தது.

தற்போது கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் சாகுபடிக்கான நடவு பணிகள் தீவிரமடைந்துள்ளது. உத்தமபாளையம் அருகே உள்ள கோகிலாபுரத்தில் நடந்த இயந்திர நடவு பணியை நேற்று முன்தினம் மாநில வேளாண் கூடுதல் இயக்குநர் சங்கரலிங்கம் நேரடியாக வயலில் ஆய்வு செய்தார்.

கூடுதல் நிதி:

ஆய்வுக்கு பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது :மற்றுமொரு பசுமைப் புரட்சிக்கு விவசாயிகள் தயாராக வேண்டும் என்பதற்காக வேளாண் துறைக்கு தமிழக அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகிறது. இயந்திர நடவில் கூடுதல் மகசூல், நோய் தாக்காமல் இருப்பது போன்ற நன்மைகள் கிடைக்கும். கடந்தாண்டு இந்த முறை சாகுபடியில் கிடைத்த அனுபவத்தை வைத்து தற்போது இயந்திர நடவிற்கு கூடுதல் மானியம் வழங்க வேளாண்துறை செய்த சிபாரிசை தமிழக அரசு ஏற்று அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி எக்டருக்கு 3 ஆயிரம் என்பதை எக்டருக்கு ரூ. 5 ஆயிரமாக உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இயந்திர நடவு மேற்கொள்ள முன்வர வேண்டும்.

உத்தமபாளையத்திற்கு 380 எக்டர், கம்பத்திற்கு 380 எக்டர், சின்னமனூருக்கு 200 எக்டர் பரப்பிற்கு இந்த ஆண்டு மானியம் வழங்கப்படும். அடுத்த ஆண்டு இன்னமும் கூடுதலாக மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறினார். கூடுதல் வேளாண் இயக்குநருடன் தேனி மாவட்ட இணை இயக்குநர் மூர்த்தி, உத்தமபாளையம் உதவி இயக்குநர் பாண்டி உள்ளிட்ட வேளாண் அதிகாரிகள் இருந்தனர்.

**முதிர்ந்த மரங்களால் மா சாகுபடியில் மகசூல் குறைவு தொழில் நுட்பங்களை பின்பற்றாததால் பாதிப்பு**

தேனி: 'பெரியகுளம், போடி பகுதியில் 50 ஆண்டு வயது முதிர்ந்த மரங்களால் மகசூல் குறைந்துள்ளது',என, பெரியகுளத்தில் நடந்த மா தொழில்நுட்ப கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் 24 ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இதில் பெரியகுளம், போடி பகுதிகளில் 19ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடி நடைபெற்று வருகிறது. இப் பகுதியில் நீலம், பெங்களூரா, பங்கனபள்ளி, அல்போன்சா, காளேபாடு போன்ற ரகங்கள் அதிகம் விளைவிக்கப்படுகின்றன. மா சீசன் மார்ச் முதல் ஜூலையாகும்.

ஆண்டுக்கு 2 லட்சம் டன் மகசூல் பெற வேண்டும். ஆனால் தற்போது மாவட்டத்தில் 80 ஆயிரம் டன் மா மகசூல் மட்டுமே பெறப்படுகிறது. அதாவது ஒரு எக்டேருக்கு 20 டன் மகசூல் பெற வேண்டும் ஆனால் வெறும் 8 டன் அளவிலேயே மகசூல் எடுக்கின்றனர்.

காரணம் என்ன:

இதுகுறித்து பெரியகுளத்தில் நடந்த மா தொழில் நுட்ப கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட தகவல்:

இப்பகுதியில் பழமையான மா மரங்கள் 50 முதல் 100 ஆண்டு வயதுடையவையாக அடர்ந்து வளர்ந்துள்ளன. அதனால் ஒரு மரத்தின் கிளை மற்றொரு மரத்தின் கிளையை சேதம் ஏற்படுத்துவதோடு இலையில் சூரிய ஒளி கிடைக்காமல் போகிறது. இதனால் பூ எடுக்கும் தன்மை குறைந்து மகசூல் குறைகிறது.

கவாத்து அவசியம்

பொதுவாக 40 ஆண்டுக்கு மேலான வயதான காய்க்காத மரங்களை ஆண்டுக்கு ஒருமுறை நுனிகளை 2 முதல் 2.5 மீட்டர் அளவிற்கு கொப்புகளை கவாத்து செய்யவேண்டும். இதனால் நல்ல இடைவெளி ஏற்பட்டு மரத்தின் மீது சூரிய ஒளி பட்டு பூ அதிகரிக்கும்.

மா சாகுபடியில் 800 எக்டேர் அளவில் சொட்டு நீர் பாசனம் செய்துள்ளனர்.

இதில் நீரில் கரையக்கூடிய உரம் வாரம் மூன்று முறை வழங்குவது அவசியம். ஆனால் விவசாயிகள் நீர் வழியாக உரமிடுவது இல்லை. இதுவும் மகசூல் குறைவிற்கு காரணம்.

புதிதாக அடர் நடவு முறையினை பின்பற்ற வேண்டும். 3 மீட்டர் வரிசை நடவில் செடிக்கு செடி 2 மீட்டர் இடைவெளியில் பயிர் நடவு செய்ய வேண்டும். இதனால் எக்டேருக்கு 500 நாற்றுகள் வளர்க்க முடியும். முறையான பயிர்பாதுகாப்பு செய்தால் எக்டேருக்கு 20 டன் மகசூல் பெற்று ஆண்டுக்கு ரூ.3 லட்சம் வருமானம் பெறலாம். இவ்வாறு அதில் வலியுறுத்தப்பட்டது.

## தக்காளி செடியில் நோய் தாக்குதல்

தேவதானப்பட்டி: பெரியகுளம் தாலுக 100 ஏக்கர் பரப்பளவில் செய்துள்ள தக்காளி சாகுபடியில் நோய் பாதிப்பால் செடிகள் காய்ந்து வருகின்றன. பலன் தரும் நிலையில் செடிகள் காய்ந்து வருவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

பெரியகுளம் தாலுகா, சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, முதலக்கம்பட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், தேவதானப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி உட்பட பல கிராமங்களில் 300 ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தக்காளி நடவு செய்து 70 நாள் முதல் தொடர்ந்து 120 நாட்கள் வரை பலன்கிடைக்கும். இலைதுளைப்பான், வெள்ளை ஈ, ஊசித்துளைப்பான், மற்றும் பாக்டீரியா வாடல், தக்காளி தேமல் நோய், புள்ளி வாடல் போன்ற நோய் தாக்குதல் இல்லாமல் இருந்தால் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு அதன் பலன் கிடைக்கும்.

நோய்தாக்குதல்; தற்போது நடவு செய்து பலன் கொடுக்கும் நிலையில் ஜெயமங்கலம்,நல்லகருப்பன்பட்டி ஆகிய பகுதியில் நூறு ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்துள்ள தக்காளி வயல்களில் பாக்டீரியா தாக்குதல் காணப்படுகிறது. பூ பூத்து காய் காய்த்துள்ள நிலையில் செடிக் காய்ந்து வருகின்றன. நோய் தாக்குதலை கட்டுப் படும் வழிமுறை தெரியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

ஜெயமங்கலம் விவசாயி முருகன்:

“வீரிய ரக தக்காளி சாகுபடி வயல்களில் நோய் தாக்குதல் காணப்படுகிறது. ஒரு ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்து பலனுக்கு வரும் வரை ரூ. 30 ஆயிரம் வரை செலவாகிறது.தற்போது தக்காளி விலையும் குறைந்துள்ளது. இந்நிலையில் பலனுக்கு வரும் செடிகள் காய்ந்து வருகிறது. இதனால் செலவு செய்த பணத்தை கூட எடுக்க முடியாத நிலை மிகவும் வேதனையாக உள்ளது” . என்றார்.

**பருத்தி, எள் ஏலம்: ரூ.1.41 கோடிக்கு விற்பனை**

இடைப்பாடி: கொங்கணாபுரத்தில், ஒரு கோடியே, 41 லட்சத்து, 90 ஆயிரத்துக்கு, பருத்தி, எள் ஏலம்போனது.

இடைப்பாடி அருகே, கொங்கணாபுரத்தில் செயல்படும், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில், பருத்தி, எள் ஏலம், நேற்று நடந்தது. அதில், ஓமலூர், காடையாம்பட்டி, தாரமங்கலம், ஜலகண்டாபுரம், மேச்சேரி, நங்கவள்ளி, தர்மபுரி மாவட்டம் பென்னாகரம், பொம்மிடி, இடைப்பாடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 700 பருத்தி மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். திருநெல்வேலி, திண்டுக்கல், தேனி, அன்னூர், பெருந்துறை, திருச்செங்கோடு மற்றும் சேலத்தில் இருந்து வந்த வியாபரிகள் கலந்துகொண்டு ஏலம் எடுத்தனர். பி.டி.,ரக பருத்தி குவிண்டால், 5,500 முதல், 6,120 ரூபாய் வரை, சுரபி ரக பருத்தி குவிண்டால், 5,700 முதல், 6,240 ரூபாய் வரை விற்றது. பருத்தி, ஒரு கோடியே, 40 லட்சத்து, 40 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. எள், 30 மூட்டைகள் கொண்டுவரப்பட்டன. அதில், வெள்ளை ரக எள், 70 முதல், 78.50 ரூபாய் வரையும், சிகப்பு ரக எள், 60 முதல், 66.50 ரூபாய் வரை விலைபோனது. எள், ஒரு லட்சத்து, 50 ஆயிரத்துக்கு ஏலம் மூலம் விற்றது. இதன்மூலம், பருத்தி மற்றும் எள், ஒரு கோடியே, 41 லட்சத்து, 90 ஆயிரத்துக்கு விற்பனையானது.

**சேலம் ஆடி பண்டிகைக்கு தயார்: 2.50 லட்சம் நாட்டுக் கோழி, சேவல்கள் விற்பனைக்கு குவிப்பு**




சேலம்: சேலம், மாரியம்மன் கோவில் ஆடி பண்டிகை கொண்டாட்டத்துக்கும், நேர்த்திக்கடன் செலுத்தவும், 1.50 லட்சம் நாட்டுக் கோழிகள், விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு லட்சம் கோழிகள் விற்பனைக்கு வரும் என, எதிர்பாக்கப்படுகிறது.

சேலம், கோட்டை மாரியம்மன் கோவில் உட்பட மாநகரில், 78 மாரியம்மன் கோவில்களிலும், மாவட்டத்தில், 112 கோவில்களில், ஆடி பண்டிகை பொங்கல் விழா, நாளை முதல் மூன்று நாள் கொணடாப்படுகிறது. இதற்காக ஆடு, கோழி பழியிட்டு நேர்த்திக்கடன் செலுத்துவது வழக்கம். அந்த வகையில், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து, நேற்று முதல் நாட்டுக்கோழிகள், சேவல்கள் விற்பனைக்காக சேலத்தில் குவிக்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை, மெட்டலா, தர்மபுரி மாவட்டம் பென்னாகரம், அரூர், விழுப்புரம், மணப்பாறை, முசிறி, புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து, அதிக அளவில் நாட்டுக் கோழிகள், சேவல்கள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. ஞாயிற்றுக் கிழமை தோறும், 50 ஆயிரம் நாட்டுக் கோழிகள் மட்டுமே விற்பனைக்கு வரும். ஆனால், நேற்று திருவிழாவுக்கு முன் வரும் ஞாயிற்றுக்கிழமை என்பதால், 1.50 நாட்டுக் கோழிகள் விற்பனைக்கு

வந்தன. இன்று மேலும், ஒரு லட்சம் கோழிகள் மற்றும் சேவல்கள் விற்பனைக்கு கொண்டுவரப்படும் என எதிர்பாக்கப்படுகிறது.கடந்த, 2015 ஆடி பண்டிகையில், சேலம் மாவட்டத்தில், இரண்டு லட்சம் நாட்டுக் கோழிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 2.50 லட்சம் நாட்டுக் கோழிகள் விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சேலம், வ.உ.சி., மார்க்கெட் மீன் கோழி இறைச்சி கசாவி விற்பனையாளர்கள் சங்க மாஜி பொருளாளர் பழனிச்சாமி கூறியதாவது: சேலம் மாவட்டத்தில் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் மாரியம்மன் கோவில்களில் ஆடிப் பண்டிகை நடந்து வருவதால், நாட்டுக்கோழிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலையில், நாட்டுக் கோழி உயிருடன் கிலோ, 300 ரூபாய் முதல், 320 ரூபாய் வரையும், தனிக்கறி கிலோ, 420 ரூபாய் முதல், 450 ரூபாய் வரை, விற்பனையாகிறது. சேலம் மாவட்டத்தில் ஆடிப் பண்டிகையில், 2.50 லட்சம் நாட்டுக்கோழி, சேவல்கள் விற்பனையாகும் என எதிர்பார்க்கிறோம். நேற்று வரை, 1.50 லட்சம் நாட்டுக் கோழிகள் விற்பனைக்கு குவிந்துள்ளன. நாளை முதல் நாட்டுக்கோழிகளின் வருகை மேலும் அதிகரிக்கும். இந்த ஆடிப் பண்டிகை, நாளை துவங்கி ஆக.,11 வரை, மூன்று நாள் கொண்டாடப்பட்டாலும், வரும் ஞாயிற்றுக் கிழமை, ஆக.,14ம் தேதி வரை நாட்டுக் கோழிகளின் விற்பனை களை கட்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## முந்திரி உற்பத்தியை அதிகரிக்க புதிய ரகங்களுக்கு மாற முடிவு

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் முந்திரி உற்பத்தியை அதிகரிக்க புதிய ரகங்களை நடவு செய்ய தோட்டக் கலைத்துறை முடிவு செய்துள்ளது.

மாவட்டத்தில் சிவகங்கை, திருப்புத்துார், காளையார்கோவில், கல்லல், சாக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் 4 ஆயிரம் எக்டேரில் முந்திரி செடிகள் உள்ளன. இதில் வி.ஆர்.ஐ.,- 1,2 ஆகிய ரகங்களே உள்ளன.

இவற்றில் ஒரு எக்டேருக்கு 200 கிலோ மட்டுமே மகசூல் கிடைக்கும். புதிய ரகங்களான வி.ஆர்.ஐ.,-3,4 ல் 300 கிலோ கிடைக்கின்றன.

இதனால் மாவட்டத்தில் புதிய ரகங்கள் நடவு செய்து, முந்திரி உற்பத்தியை அதிகரிக்க தோட்டக் கலைத்துறை முடிவு செய்துள்ளது.
இதற்காக தேசிய தோட்டக் கலைத்துறை மூலம் மானியத்தில் முந்திரி செடிகள் வழங்கப்படுகின்றன.
தோட்டக் கலை துணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: முந்திரி நடவு செய்த 4 ஆண்டுகளில் விளைச்சலுக்கு வரும். நுாறு ஆண்டுகள் வரை பலனளிக்கும். சிவகங்கை மாவட்டத்தில் பழைய ரகங்களே உள்ளன.
குறைவான மகசூலே கிடைப்பதால் அவற்றை மாற்ற முடிவு செய்துள்ளோம். இந்த ஆண்டு 50 எக்டேருக்கு புதிய ரக செடிகளை மானியத்தில் வழங்க உள்ளோம்.
இவற்றை ஏற்கனவே உள்ள செடிகளுக்கு இடையே நடவு செய்ய வேண்டும். நான்கு ஆண்டுகளுக்கு பின் பழைய செடிகளை அகற்றி விடலாம், என்றார்.

## திருப்புவனத்தில் நாவல் பழ விளைச்சல் அதிகரிப்பு

திருப்புவனம்: திருப்புவனம் வட்டாரத்தில் இந்தாண்டு நாவல் பழ விளைச்சல் அதிகரித்துள்ளது.
திருப்புவனம் அருகே பூவந்தியில் ஒட்டு நாவல் பழ மரங்கள் அதிகம் உள்ளன. நாவல் பழ சீசன் ஜூனில் தொடங்கி செப்டம்பர் வரை நீடிக்கும். ஜூலையில் நாவல் பழ சீசன் உச்சத்தில் இருக்கும்.
ஆடியில் காற்றடிக்கும் சீசன் என்பதால் நாவல் பழங்கள் அதிகளவில் மரத்தில் இருந்து தானாகவே உதிரும். அவற்றை சேகரிக்க மரத்தின் கீழ் வேட்டி,சேலை,வலை போன்றவற்றை விவசாயிகள் விரித்து வைத்திருப்பர்.

நாட்டு நாவல் 5 ஆண்டுகளுக்கு மேல் தான் விளைச்சலுக்கு வரும். ஒட்டு நாவல் பழ மரங்கள் ஒரு ஆண்டுக்கு பிறகு பலன் தர தொடங்கி விடும்.

ஒரு மரத்திற்கு அதிகபட்சமாக 2 கிலோ வரை பறிக்கலாம். சீசனுக்கு ஒரு மரம் 50 கிலோ வரை விளைச்சல் கொடுக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

## மருத்துவ துளிகள்: கற்கும் திறனை அதிகரிக்கும் 'பட்டை!'



எதையும் சீக்கிரம் கற்றுக்கொள்ளும், 'கற்பூர புத்தி' திறன் சிலருக்கு இயல்பாகவே உண்டு. சிலருக்கு சற்று தாமதமாகத்தான் எதுவும் பிடிபடும். இப்படி மந்த புத்தி உள்ளவர்களுக்கு, நம் சமையலறையில் உள்ள மசாலா அயிட்டமான இலவங்கப் பட்டை உதவக்கூடும் என்கிறது சமீபத்திய ஒரு ஆய்வு. அமெரிக்காவிலுள்ள ரஷ் பல்கலைக்கழகத்தின் நரம்பியல் விஞ்ஞானியான மருத்துவர் கலிபாதா பாஹனும், அவரது குழுவினரும், ஆய்வகத்தில் எலிகள் மீது நடத்திய அந்த ஆய்வின் முடிவில், பட்டையின் மகிமை தெரியவந்துள்ளது.இலவங்கப் பட்டைக்கு கம கம வாசனை தருவது, 'சினமால்டிஹைட்' என்ற வேதிப்பொருள். இதை நம் கல்லீரல் செரிமானம் செய்து, 'சோடியம் பென்சோவேட்' என்ற வேதிப்பொருளாக மாற்றி ரத்தத்தில் கலக்கச் செய்கிறது.ரத்தத்தின் மூலம் சோடியம் பென்சோவேட் மூளைக்குச் சென்றதும், நினைவாற்றலின் உறைவிடமான, 'ஹிப்போகேம்பஸ்' பகுதியை தூண்டுகிறது. இதனால், மூளைக்குள் உள்ள செல்கள் ஒன்றோடொன்று தகவல் பரிமாறும் திறன் சுறுசுறுப்படைகிறது. ஆய்வகத்தில், மந்த அறிவுள்ள எலிகளுக்கு, சினமால்டிஹைட் கலந்த தீனியை ஒரு மாதம் கொறிக்கத் தந்தனர் விஞ்ஞானிகள். இதன் விளைவாக, விரைவில் கற்கும் எலிகளுக்கு இணையாக கற்கும் திறனை மந்த எலிகளும் பெறுவதை விஞ்ஞானி கள் உறுதி செய்துள்ளனர்.கற்கும் திறன் குறைவாக உள்ள மாணவர்களுக்கு மட்டுமல்லாது, மூளைத்திறனை குலைக்கும், 'அல்சைமர்ஸ்' மற்றும், 'பார்க்கின்சன்ஸ்' போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கும்

சினமால்டிஹைட் உதவக்கூடும் என்று மருத்துவர் பாஹனும், அவரது குழுவினரும் நம்புகின்றனர்.அடுத்து, மனிதர்கள் மீதான பரிசோதனைக்கு பாஹனின் குழு தயாராகி வருவதாக, 'நியூரோஇம்யூன் பார்மகாலஜி' என்ற ஆராய்ச்சி இதழ் தெரிவித்து
உள்ளது.

**தினகரன்**

## இன்றைய வேளாண் செய்திகள்

## கொட்டையூரில் உளுந்து ஏலம்

கும்பகோணம்: கொட்டையூரில் நடந்த மறைமுக ஏலத்தில் 20 குவிண்டால் உளுந்து விற்பனைக்கு வந்தது. தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தை அடுத்த கொட்டையூரில் உள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உளுந்து மறைமுக ஏலம் நேற்று நடைபெற்றது.இதில் நாச்சியார்கோவில், சாக்கோட்டை, மருதாநல்லூர், சேங்கனூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 6 விவசாயிகள் 20 குவிண்டால் உளுந்து கொண்டு வந்தனர். இதில் கும்பகோணம், ஆவூர், தஞ்சை பகுதியிலிருந்து 3 வியாபாரிகள் விற்பனையில் கலந்து கொண்டனர். இந்த வாரத்தில் கொண்டு வரப்பட்ட உளுந்து ஒரு குவிண்டால் அதிகபட்ச விலையாக ரூ.9,400 வரை விலை நிர்ணயிக்கப்பட்டது. உளுந்தின் தரத்தை ரவி, கண்காணிப்பாளர் பிரியமாலினி மற்றும் வியாபாரிகள் சோதித்து பார்த்தனர்.

## 110 விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள்

வலங்கைமான் : வலங்கைமான் ஆலங்குடியில் மாவட்ட வேளாண்துறை சார்பில் சம்பா சாகுபடி துவக்க விழா நடந்தது. கலெக்டர் நிர்மல்ராஜ் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் மயில்வாகனன் வரவேற்றார். நாகை எம்பி கோபால் முன்னிலை வகித்தார். நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி இயக்குநர் ரவி வாழ்த்தினர். 110 விவசாயிகளுக்கு ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள இடுப்பொருட்களை அமைச்சர் காமராஜ் வழங்கினார். முன்னதாக இயந்திரத்தின் மூலம் நேரடி நெல்

விதைப்பு செய்யும் பணியை துவக்கி வைத்தார். ஆர்டிஓ முத்துமீனாட்சி, வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குநர் தேவேந்திரன், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளே... வரகு பயிரிட்டு வருமானத்தை அள்ளுங்க..! வேளாண்துறை அட்வைஸ்

பழநி : வருமானம் அதிகரிக்க வரகு பயிரிடலாமென வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். வரகு பயிரிடும் விவசாயிகளுக்கு கோ 3, ஏ.பி.கே 1 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். மரக்கலப்பை கொண்டு 2 முறை நன்கு ஆழமாக உழுது நிலத்தை சமன் செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம் 600 கிராம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா 600 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்து பின், விதைப்பு செய்ய வேண்டும். கை விதைப்பு முறைக்கு ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதை பயன்படுத்த வேண்டும்.

வரிசைக்கு வரிசை 22.5 சென்டிமீட்டர் *10 சென்டிமீட்டர் இடைவெளியும் இருக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி, பின் உழ வேண்டும். தொழு உரத்துடன் 10 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம் மற்றும் 10 பொட்டலங்கள் பாஸ்ப்போபாக்டீரியா ஆகிய நன்மை தரும் உயிர் உரங்களை சேர்மம்து இடலாம். ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் மணிச்சத்துக்களை இட வேண்டும். பயிர் விதைத்த 15ம் நாள் ஒரு முறையும், 40 நாள் ஒரு முறையும் கைக் களை எடுக்க வேண்டும்.

களை எடுத்தவுடன் வரிசைக்கு வரிசை 22.5 சென்டிமீட்டர் மற்றும் செடிக்கு செடி 10 சென்டிமீட்டர் இடைவெளியில் பயிர்களை களைக்க வேண்டும். விதையின் மூலம் கதிர்கரிப்பூர்டை நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மேன்கோசெப் (அ) குளோரோதலோனிலை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். நோய் எதிர்ப்பு ரகமான கோ 3ஐ பயிரிடலாம். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்து தானியங்களைப் பிரித்தெடுக்க வேண்டும். பிறகு இவற்றை நன்றாக காயவைத்து, சுத்தம் செய்து சேமித்து வைக்க வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் விபரங்களை பெற விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண் அலுவலர் அலுவலகத்தை அணுகலாமென வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பயிற்சி

திருவாடானை : திருவாடானை அருகேயுள்ள கங்கை விலாசம் கிராமத்தில் விவசாயிகளுக்கு நீர்சேமிப்பு மற்றும் நீர்மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். நீர் சேமிப்பு, நீர் மேலாண்மை குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் கொர்சோன் தங்கராஜ், வேளாண்மை அலுவலர் பாக்யராஜ், மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை பொறியாளர் புகழேந்தி ஆகியோர் விவசாயிகளிடம் விரிவாக விளக்கி பேசினர். மேலும் பண்ணைக்குட்டை பயன்பாடு, அதில் மீன்வளர்ப்பு தொழில்நுட்பம் போன்ற தகவல்களை விவசாயிகளுக்கு எடுத்து கூறப்பட்டது.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 9ம் தேதி நண்பகல் 12.30 மணிக்கு கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகள், புகார்களை தெரிவிக்கலாம் என கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

### குமரி மலையோர பகுதியில் சாரல் மழை : பேச்சிப்பாறையில் இருந்து 485 கனஅடி தண்ணீர் வெளியேற்றம்

நாகர்கோவில்: குமரி மலையோர பகுதிகளில் நேற்று சாரல் மழை பெய்தது. பேச்சிப்பாறை அணையில் இருந்து விவசாயத்திற்காக 485 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வந்த நிலையில் 3ம் தேதி இரவு மேற்கு மாவட்ட பகுதிகளில் சாரல் மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை மலையோர பகுதிகளில் சாரல் மழை பெய்தது.

மேலும் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு சில இடங்களில் சாரல் மழை பெய்தது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 38.85 அடியாக இருந்தது. அணைக்கு 115 கன அடி தண்ணீர்

வரத்து காணப்பட்டது. விவசாயத்திற்காக 485 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 58.65 அடியாக இருந்தது. அணைக்கு 137 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலையில், 457 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது.

சிற்றார்1ல் 14.66 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 100 கன அடி தண்ணீர் வந்துகொண்டு இருக்கிறது. அணையில் இருந்து 100 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. சிற்றார்2ல் 14.76 அடியாக நீர்மட்டம் உள்ளது. பொய்கையில் 16.40 அடியாக நீர்மட்டம் காணப்பட்டது. மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகும். நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை பகுதியில் 3.8 மில்லி மீட்டர் மழை பெய்தது. பெருஞ்சாணியில் 6.2 மில்லி மீட்டர், சிற்றார்1 பகுதியில் 6.8 மில்லி மீட்டர், சிற்றார்2 பகுதியில் 1.8 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

**உணவில் சிறந்தது சிறுதானியம்...**



ஆறுமாதக் குழந்தை முதல் அனைவருக்கும் ஏற்ற சத்தான உணவு சிறுதானியம். ஒவ்வொரு சிறுதானியத்துக்கும் தனித்துவச் சிறப்புகள் உள்ளன. எந்தெந்த

சிறுதானியத்தில் என்னென்ன சிறப்புகள் என்பதைத் தெரிந்துகொண்டால், அவற்றைப் பயன்படுத்தி உடலை வலுப்படுத்திக்கொள்ள உதவியாக இருக்கும்.

கம்பு : ஆரோக்கியமான சருமத்தைத் தரும். பார்வைத்திறன் மேம்படும். உடல் வெப்பம் தணியும். வயிற்றுப் புண்களைக் குணப்படுத்தும். பாலூட்டும் தாய்மார்களுக்கு, பால் சுரக்க உதவும்.

தினை : இதயத்தைப் பலப்படுத்தும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். ரத்தத்தில் உள்ள சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்தும். மகிழ்ச்சியான மனநிலையைத் தரும்.

சாமை : ரத்தசோகையைக் குணப்படுத்தும். சர்க்கரை நோயாளிகளுக்கு உகந்தது. மலச்சிக்கல் தீரும். விந்தணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்க உதவும். உடலில் கொழுப்பு படிவதைத் தடுக்கும்.

சோளம் : உணவுக் குழாய் தொடர்பான நோய்கள் வருவது தடுக்கப்படும். ரத்த ஓட்டத்தைச் சீர்செய்யும். செரிமான சக்தி மேம்படும். வாயுத்தொல்லை நீங்கும். உடலுக்கு ஆற்றலைத் தரக்கூடியது.

கேழ்வரகு : எலும்புகளை உறுதிசெய்யும். இரும்புச்சத்து நிறைந்துள்ளது. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும். உடல் வெப்பத்தைக் குறைக்கும். மூப்படைதலைத் தாமதப்படுத்தும். சருமத்தில் பளபளப்பு உண்டாகும்.

வரகு : உடல் எடையைக் குறைக்கும். மாதவிடாய்க் கோளாறுகளைச் சரிசெய்யும். மூட்டுவலி இருப்போர் அவசியம் சாப்பிட வேண்டும். சர்க்கரை, நரம்பு தொடர்பான பிரச்னைகளுக்கு நல்லது.

குதிரைவாலி : சர்க்கரை நோய் வராமல் தடுக்கும். இதய நோய்கள் வராமல் பாதுகாக்கும். நார்ச்சத்து நிறைவாக உள்ளதால், செரிமான மண்டலத்தை சீராக்கும், மலச்சிக்கலைத் தடுக்கும்.

**நரம்புகளை பலப்படுத்தும் பிரண்டை**



முதுமை காரணமாக எலும்பு தேய்மானம், நரம்புகள் பலவீனம், ரத்த ஓட்டத்தில் கோளாறு, நீரிழிவு உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்படும். வெற்றிலையை பயன்படுத்தி நரம்புகளை பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். 2 ஸ்பூன் வேற்றிலை சாறுடன், அரை ஸ்பூன் தேன் கலந்து காலை, மாலை என ஒரு வாரம் குடித்து வந்தால் நரம்புகள் பலப்படும். சர்க்கரை நோயாளிகள் தேனுக்கு பதில் மிளகு சேர்க்கவும்.

நரம்பு பலவீனத்துக்கு வெற்றிலை மருந்தாகிறது. வெற்றிலை காரம், மணத்தை உடையது. செரிமான கோளாறை போக்கும். ரத்த ஓட்டத்தை சீர்செய்யும். ரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பை சரிசெய்யும். வயதானவர்களுக்கு நல்ல பலத்தை தரக்கூடியதாகிறது. பிரண்டையை பயன்படுத்தி வயதானவர்களுக்கு நரம்பு, தசையை பலப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம்.

பிரண்டை கொடியை எரித்து சாம்பலாக்கி கால் ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் கால் ஸ்பூன் சாதிக்காய் பொடி சேர்க்கவும். அரை ஸ்பூன் நெய் சேர்த்து கலக்கி இரவு தூங்கப்போகும் முன்பு சாப்பிட்டுவர நரம்பு, தசை பலப்படும். நரம்பு

தளர்ச்சி உள்ளவர்கள் தினமும் இதை எடுத்துக்கொள்ளலாம். பிரண்டை எலும்புகளுக்கு பலம் கொடுக்க கூடியது. வயதானவர்களுக்கு ஏற்படும் கை, கால் குடைச்சல், எரிச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம்.

கால் ஸ்பூன் வசம்பு பொடி எடுக்கவும். இதில், 2 ஏலக்காய் தட்டி போடவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர கை, கால் குடைச்சல், எரிச்சல் குணமாகும். வசம்பு நரம்புகளுக்கு பலம் தரக்கூடியது. அரை ஸ்பூன் பூனைகாலி விதை பொடி, அரை ஸ்பூன் அமுக்குரா சூரணம், சிறிது பனங்கற்கண்டு, காய்ச்சிய பால் சேர்த்து கலந்து இரவு நேரத்தில் குடித்துவர நரம்புகளில் ஏற்படும் பாதிப்பு குறையும்.

கை, கால்களில் ஏற்படும் நடுக்கம் குறையும். பக்கவாதத்துக்கு மருந்தாக அமைகிறது. நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் பூனைக்காலி விதை, அமுக்குரா சூரணம் உடலுக்கு பலம் கொடுக்க கூடியது. வறட்டு இருமலுக்கான மருத்துவத்தை பார்க்கலாம். சுக்கு, ஏலக்காயை பொடியாக்கி கால் ஸ்பூன் எடுத்து தேனுடன் கலந்து காலை, மாலை சாப்பிட்டுவர வறட்டு இருமல் சரியாகும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு மாத விலையாக கிலோவுக்கு 14 ரூபாய் 50 காசு நிர்ணயம்



குன்னூர்,

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு மாத விலையாக கிலோவுக்கு 14 ரூபாய் 50 காசு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

60 ஆயிரம் சிறு விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறு ஈடுபட்டு வரும் விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் அறுவடை செய்யும் பச்சை தேயிலையை சிறுதேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு வழங்கப்படும் பச்சை தேயிலைக்கு வார விலை, மாத விலை என்று இரு விலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. வாரந்தோறும் நடைபெறும் தேயிலை ஏலத்தை கருத்தில் கொண்டு வார விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 4 வார விலைகளை கொண்டு மாத விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>மாத விலை நிர்ணயம்</u>

கடந்த ஜூலை மாதம் விவசாயிகள் வினியோகம் செய்த பச்சை தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு 14 ரூபாய் 50 காசு விலை வழங்க வேண்டும் என்று தேயிலை வாரியம் அறிவுறுத்தியது. இதன் அடிப்படையில் பெரும்பாலான தேயிலை தொழிற்சாலைகள் பச்சை தேயிலைக்கு மாதவிலையாக 14 ரூபாய் 50 காசு விலை நிர்ணயம் செய்தது. இருப்பினும் ஒருசில தேயிலை தொழிற்சாலைகள் தங்களுடைய விற்பனை விலைக்கு ஏற்றவாறு கிலோவுக்கு 15 ரூபாய் 50 காசு வழங்கியது. இதேபோன்று தரமான பச்சை தேயிலையை கொள்முதல் செய்து தேயிலைத்தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் கிலோவுக்கு ரூ.17 வரை விலை வழங்கியது.

இதுகுறித்து குன்னூர் சோகத்துறையை சேர்ந்த விவசாயி பாபு கூறியதாவது:– நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு வருவதால் பச்சை தேயிலை மகசூல் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. மகசூல் குறைவடைந்த காலங்களில் பச்சை தேயிலை விலை அதிகரிக்கும். ஆனால் தற்போது படிப்படியாக விலை குறைந்து வருகிறது. இதனால் தேயிலை விவசாயிகள் பெரிதும் அவதி அடைந்து வருகிறார்கள். எனவே மத்திய, மாநில அரசுகள் பச்சை தேயிலைக்கு உரிய விலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**யூரியாவுக்கு பதிலாக தென்னை நார்கழிவில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது தஞ்சையில் கயிறு வாரிய தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேட்டி**



யூரியாவுக்கு பதிலாக தென்னை நார்கழிவில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாக தஞ்சையில் கயிறு வாரிய தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

பேட்டி

தஞ்சையை அடுத்த பிள்ளையார்பட்டியில் உள்ள கயிறு வாரிய மண்டல விரிவாக்க மையத்திற்கு மத்தியஅரசின் கயிறு வாரிய தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் நேற்று வந்தார். அங்கு அவர், கயிறு பொருட்கள் மற்றும் விரிவாக்க மையத்தை பார்வையிட்டார். பின்பு அங்கு பயிற்சி பெறும் பெண்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார். இதையடுத்து சி.பி.ராதாகிருஷ்ணன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

தஞ்சையில் 1977–ம் ஆண்டு கயிறு வாரிய விரிவாக்க மையம் வாடகை கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. மாநிலஅரசு 15 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. கேரள மாநிலம் ஆலப்புலா, கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள கயிறு

வாரிய ஆராய்ச்சி மையத்தை போல் தஞ்சை கயிறு வாரிய விரிவாக்க மையத்தை அகில இந்திய கயிறு வாரியத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மையமாக மாற்ற இருக்கிறோம். இதற்காக ரூ.1 கோடியில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. நம் நாட்டில் கடந்த 2015–16–ம் நிதியாண்டில் ரூ.1,901 கோடி அளவுக்கு கயிறு பொருட்கள் ஏற்றுமதி செய்து புதிய சிகரத்தை கயிறு வாரியம் எட்டி இருக்கிறது. இதில் தமிழகத்தின் பங்கு ஏறத்தாழ 50 சதவீதமாக உயர்ந்துள்ளது. அடுத்த 2 ஆண்டுகளில் ஏற்றுமதியை 2 மடங்காக உயர்த்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இயற்கை உரம்

ஆழப்புலாவில் உள்ள கயிறு வாரிய ஆராய்ச்சி மையத்தில் யூரியாவுக்கு மாற்றாக அதற்கு இணையான இயற்கை உரத்தை தென்னை நார்கழிவில் இருந்து தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்வில் ஏறத்தாழ 90 சதவீதம் வெற்றி கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் யூரியாவுக்கு மாற்றாக இது அமையும். பெங்களூருவில் உள்ள ஆராய்ச்சி மையத்தில் மரத்துக்கு பதிலாக தென்னைநார் மரப்பலகையில் வீடு கட்டும் திட்டத்தை செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது. தென்னைநார் மரப்பலகை தேக்கு மரப்பலகைக்கு இணையானது. எதிர்காலத்தில் மேஜை, நாற்காலி போன்ற மரப்பொருட்களுக்கு பதிலாக தென்னைநார் மரப்பலகை முக்கிய பங்கு வகிக்கும். இது தென்னை வளர்ச்சிக்கு உதவும். இந்த ஆய்வு வெற்றி பெற்றால் தென்னை நார்க்கழிவு மரப்பலகை மூலம் 2 லட்சம் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுப்பதாக கேரள மாநில நிதி மந்திரி உறுதி அளித்துள்ளார். கோவையில் நடந்த கயிறு பொருட்கள் கண்காட்சியில் மாதிரி வீடு பார்வைக்காக வைக்கப்பட்டு இருந்தது. தென்னை நார்கழிவு மரப்பலகை மூலம் ராணுவத்தினருக்கு வீடு கட்டி கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். மேலும் பிரதமர், முதல்–அமைச்சர் ஆகியோருக்கும் வழங்க இருக்கிறோம்.

கண்காட்சி

நாடு முழுவதும் 20 கயிறு பொருட்கள் தொழிலகங்களின் தொகுப்பு அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மட்டும் திண்டுக்கல், காங்கேயம், பல்லடம்,

நெல்லை, பொள்ளாச்சி, மேட்டூர், தருமபுரி மதுரை, கன்னியாகுமரி ஆகிய 9 இடங்களில் கயிறு பொருட்கள் தொழிலகங்களின் தொகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. விரைவில் தஞ்சையில் ரூ.8 கோடி மதிப்பில் கயிறு பொருட்கள் தொழிலகங்களின் தொகுப்பு தொடங்கப்படும். மேலும் தஞ்சையில் விரைவில் கயிறு பொருட்கள் கண்காட்சி நடத்தப்படும். நாடு முழுவதும் கயிறு வாரியத்தின் மூலம் 30 விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை நவீனமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. கயிறு தொழிலை வளர்ப்பதில் கயிறு வாரியம் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. மாநிலஅரசின் ஒத்துழைப்பும் நல்லபடியாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.6 ஆயிரத்துக்கு விலை போனது



பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் அதிகபட்சமாக குவிண்டால் ரூ.6 ஆயிரத்துக்கு விலை போனது.

பருத்தி ஏலம்

தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 9–வது வாரமாக பருத்தி மறைமுக ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு பாபநாசம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து ஆயிரத்து 162 விவசாயிகள் பருத்திகளை கொண்டு வந்திருந்தனர். இதில் கோவை, திருப்பூர், சத்தியமங்கலம், கும்பகோணம், நாகை, செம்பனார்கோவில், ஆக்கூர், முக்கூர் ஆகிய பகுதிகளில் இருந்து பருத்தி வியாபாரிகள் வந்திருந்தனர்.

தஞ்சை விற்பனை குழு செயலாளர் ரவி, பாபநாசம் விற்பனைக்குழு கண்காணிப்பாளர் பிரியா மாலினி, மேற்பார்வையாளர் சங்கர்ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் மறைமுக பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் ஆயிரத்து 596 குவிண்டால் பருத்தி ரூ.88 லட்சத்து 23 ஆயிரத்து 844–க்கு விலை போனது. அதிகபட்சமாக குவிண்டால் ரூ.6 ஆயிரத்து 19–க்கும், சராசரியாக ரூ.5 ஆயிரத்து 529–க்கும், குறைந்தபட்சமாக ரூ.4 ஆயிரத்து 519–க்கு விலை போனது.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.1 கோடியே 7 லட்சத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் அமைச்சர்கள் வழங்கினர்



உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.1 கோடியே 7 லட்சத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி ஆகியோர் வழங்கினர்.

நலத்திட்ட உதவிகள்

தமிழக முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா முசிறியில் நடைபெற்றது. விழாவிற்கு திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் மருதராஜா, முசிறி சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி ஆகியோர் கலந்து கொண்டு முசிறி, தொட்டியம், துறையூர் தாலுகா பகுதிகளை சேர்ந்த 827 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 7 லட்சம் மதிப்பில் உழவர் பாதுகாப்பு திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டம் ஆகியவற்றின் கீழ் நலத்திட்ட உதவிகளான கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, விபத்து நிவாரண உதவித்தொகை மற்றும் இலவச வீட்டுமனைப்பட்டாக்கள், பார்வையற்றவர்களுக்கு இலவச பட்டாக்கள் உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் பிரின்ஸ்.தங்கவேல், மல்லிகா, தொகுதி செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ராசாத்தி, ஒன்றிய குழுத்தலைவர் சரஸ்வதி, பேரூராட்சித் தலைவர் மாணிக்கம், துணைத்தலைவர் ராமசாமி, ஒன்றிய செயலாளர் ராஜமாணிக்கம், ஒன்றிய ஆணையர் மங்களேஸ்வரி மற்றும் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக திட்ட அலுவலர் தர்ப்பகராஜ் வரவேற்றார். முடிவில் சமூக பாதுகாப்பு திட்ட தனிதுணை கலெக்டர் மீனாட்சி நன்றி கூறினார்.

புகைப்பட கண்காட்சி

மேலும் முசிறி மீனாட்சி திருமண மண்டபம் அருகே செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. இதில் முதல் அமைச்சரால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களான பசுமை வீடு, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா

மடிக்கணினிகள், சைக்கிள்கள், பெண்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர், விலையில்லா அரிசி, தாலிக்குத் தங்கம் மற்றும் நிதியுதவி வழங்குதல், அம்மா உணவகம் மற்றும் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட மற்றும் திருச்சி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்கள் பற்றிய புகைப்படங்களும் இடம் பெற்று இருந்தன. புகைப்பட கண்காட்சியை அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வளர்மதி ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டனர்.